# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.140/2025** |
| Deposition of witness | : | P.W.3 |
| Name | : | வைரவநாதன் |
| Father's /Husband Name | : | மாரிமுத்து |
| Village | : | வேளாங்கண்ணி |
| Taluk | : | கீழ்வேளூர் |
| Age | : | 58 |
| Occupation | : | ஓட்டுநர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 04th day of November 2025. Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது வேளாங்கண்ணி வசித்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 02.06.2025 ம் தேதி காலை 11.30 மணியளவில் நானும், இங்கல்சால் மற்றும் அ.சா.1 ஆகியோருடன் காப்பணாமங்கலத்திற்கு வந்திருந்தோம். அ.சா.1 ஆஜர் எதிரி வீட்டிற்கு பின்னால் வேலி வைக்க சென்ற போது பிரச்சனையானது. அப்போது ஆஜர் எதிரி பாபு என்பவர் அ.சா.1 ஐ கெட்ட வார்த்தைகளால் திட்டி அ.சா.1 ன் சட்டையை பிடித்தார். அப்போது அதை நான் தடுத்தேன். இது சம்மந்தமாக குடவாசல் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

எனக்கு எத்தனை வயது என்றால் 58 வயது ஆகிறது. எனது போலீசார் வாக்குமூலத்தில் எந்த வாகனத்தில் வந்தோம் என்றும் வாகன பதிவு எண் குறிப்பிட்டுள்ளோமா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் ஆஜர் எதிரி பாபுவின் வீட்டிற்கு பின்னால் தான் வயல் உள்ளது என்றால் சரிதான். ஆஜர் எதிரிக்கும் அ.சா.1 க்கும் இடையே ஏற்கனவே உரிமையில் வழக்கு

நிலுவையில் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலீசார் வாக்குமூலத்தில் licence எண் குறிப்பிட்டுள்ளதா என்றால் இல்லை. நானும் அ.சா.1ம் ஒரே தெருவைச் சேர்ந்தவர் தான் என்றால் அவர் கீழத் தெரு நான் மேலத்தெரு. அ.சா.1 ஐ எனக்கு எவ்வளவு வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 30-40 வருடங்களாக தெரியும். நான் சொன்ன நாள் சொன்ன நேரத்தில்சொன்ன இடத்தில் மேற்படி சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1க்கு எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.04 10:33:24 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`